யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

# Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | தமிழ் - I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01) மேல்வரும் செய்யுட்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட்டதவத்
தெழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்
குழைய கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென்றவ்வே

(அ) இச்செய்யுளின் பொருளை இக்கால மொழிநடையில் எழுதுக.

(ஆ) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அணிச் சிறப்பினை எடுத்துக்காட்டி விளக்குக.

(இ) இச்செய்யுளில் முதல், கரு, உரிப் பொருட்கள் வெளிப்படுமாற்றை எடுத்துக் காட்டுக.

(ஈ) இச்செய்யுளில் தலைவி வருந்துவதற்கான காரணம் என்ன?

agaram.lk

(ii) அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வர நல்கிப்
பரிந்தா லென்னா மென்றனள் பாயுங் கனலேபோ
லெரிந்தாறாதே யின்னுயிருண்ணு மெரி யன்னாள்

(அ) இச்செய்யுளில் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ஆ) இச்செய்யுளில் குறிப்பிடப்படும் தசரதனுக்கு முந்திய சூரிய வம்ச அரசன் யார்? அவனது செயற்பாடு என்ன?

(இ) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அணியினை எடுத்துக்காட்டி விளக்குக.

(ஈ) இப்பாடலில் கைகேயி பற்றிய உமது மன எண்ணத்தினை விளக்கிக் கூறுக.



Scanned with CamScanner

02) 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) கீழ்த் திசையின் இருட்கீறி கிளர் உஷை நுதலில்
கிளிமூக்கு நிறப்பொட்டுத் தீட்டும் கிரணன்
ஆழ்கடலின் அலைகளிடம் ஆடல் கற்றேன்
அனற் சுவாலை இடத்தோடி அருளும் காற்று
வீழ் புனலில் ஏழ் வர்ணம் விளைத்து புலத்தை
விளைவேற்றி வினையின் திறம் விளம்பும் நதிகள்
சூழ் மதுவை விருந்தீந்து சுரும்பு பாட
சுகம் தத்தை தூவு குளிர் சோலை மலர்கள்

அந்தரத்தே இருட்சாணம் மெழுகி உடுவாம்
அரும் புள்ளிக் கோலமிடும் அந்திவானம்
விந்தையதாம் வேழம் என விண்ணில் பறந்து
வெண்முத்து நேர் திவலை சிந்தும் மேகம்
செந்துளிராம் புல் நுனியின் வைரச் சிரிப்பை
தெளித்து ரவி அணைப்பினிலே சேர் பனித்துளிகள்
சுந்தரமாய் காதலர்கள் தூக்கம் நீங்கி
சொல்லாட தூண்டவரும் சோதி மயம்

மண் உழுது பொன் நெல் தரும் தாய் நேர் உழவர்
மானமொடு வாழக் கலை நெய் கைகோளர்
விண்ணதிர முரசார்த்துப் பகைமை வீழ்த்தி
வெற்றியின் சங்கூதுகின்ற யுத்த வீரர்
கண் துயிலை நேர் மரணம் கண்ணின் விழிப்பு
காட்சி நிகர் ஜனனம் மொழி காக்கும் கவிஞர்
உண்மை என உள்ளதெனும் தெய்வம் இந்த
உலகதனைப் படைக்க முதலுற்றதென தொழிலே

தொழில் இன்றேல் அழிவாகும் அழிவதும் தொழிலே
தொழிலில்லா இடமில்லை சுதந்திரம் தொழிலே
அழகில்லா ஒன்றினை அழகாக்கும் தொழிலே
அச்சமில்லா உச்சிதத்தின் ஆக்கம் தொழிலே
அழிவில்லா பெருமையதன் கருத்து தொழிலே
காலத்தால் களங்கமுறா கற்புத் தொழிலே
தொழிலாளர் ஓங்கிடுக அவர் பசிதுடைக்க
தொண்டாற்றல் நமது தொழில் கவிதைத் தொழிலே

(i) இச்செய்யுளில் கவிஞர் யார் யாரை தொழிலாளர் எனக் குறிப்பிடுகின்றார் என்பதை தெளிவுபடுத்துக.

(ii) தொழிலின் முதன்மை பற்றி கவிஞர் கூறுவனவற்றைத் துலக்குக.

(iii) தொழிலாளர் தொடர்பாக சமூகம் ஆற்றவேண்டிய பணிகள் எவை?

(iv) இச்செய்யுளில் இடம் பெறுவனவற்றுள் இரண்டு உருவக அணிகளையும் இரண்டு உவமை அணிகளையும் எடுத்துக் காட்டுக.



agaram.lk

Scanned with CamScanner

(ஆ) கண்களை மூடித்திறக்கிறாள் அகலிகை பிரக்ஞை தெரிகிறது.
சாப விமோசனம்! சாப விமோசனம்.

தெய்வமே! மாசு பட்ட இந்தத் தசைக்கூட்டம் பவித்திரம் அடைந்தது. தனக்கு மறுபடியும் புதிய வாழ்வை கொடுக்க வந்த தெய்வீக புருஷன் எவன்? அந்தக் குழந்தையா?

அவன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறாள். ராமன் ஆச்சரியத்தால் ரிஷியைப் பார்க்கிறான்.

விசுவாமித்திரருக்கு புரிந்து விட்டது. இவள் அகலிகை. அன்று இந்திரனுடைய மாய வேஷத்திற்கு ஏமாறிய பேதை. கணவன் மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக தன் உடம்பை மாய வேஷத்தால் ஏமாறி, மாசுபடுத்திக் கொண்டவள். கோதமனின் மனைவி. அவ்வளவையும் இராமனிடம் சொல்கிறார். அதோ நிற்கும் புற்று இருக்கிறதே; அதில் வலை முட்டையில் மோனத் தவங் கிடக்கும் பட்டுப் பூச்சி போல தன்னை மறந்து நிஷ்டையில் ஆழ்ந்து இருக்கிறான். அதோ அவனே எழுந்து விட்டானே.

நிஷ்டை துறந்த கண்கள் சாணை தீட்டிய கத்தி போல் சுருள்கின்றன. உடலிலே காய கற்பம் செய்தது போல் வலு பின்னிப் பாய்கிறது. மிடுக்காக பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவன் போல தயங்கித் தயங்கி வருகின்றான்.

மறுபடியும் இந்தத் துன்ப வலையா? சாப விமோசனத்திற்கு பிறகு வாழ்வு எப்படி என்பதை மனசு அப்பொழுது நினைக்கவில்லை. இப்பொழுதோ அது பிரமாண்டமான மதிலாக அவனது வாழ்வை சுற்றியே மண்டலிக்கின்றது. அவன் மனமும் மிரளுகின்றது.

(i) அகலிகை, கோதமன் ஆகியோரின் மனநிலை பற்றி நீர் கூறுவது என்ன?

(ii) "பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவனைப் போல தயங்கித் தயங்கி வருகின்றான்" இதன் ஊடாக ஆசிரியர் கூறவந்த செய்தி என்ன?

(iii) இவ்வுரைப் பகுதியில் இடம்பெறும் உவமையணிகளில் இரண்டினை எடுத்து விளக்குக.

(iv) பின்வரும் வட சொற்களுக்கான தமிழ்ப் பதங்களைக் கூறுக.
விமோசனம், பவித்திரம், நிஷ்டை, காயகற்பம் (16 புள்ளிகள்)

## பகுதி - II

03) **வினைத்தூய்மை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) வினைத்தூய்மை என்றால் என்ன? அதன் சிறப்பு
(ஆ) பழியும் பாவமுந் தரும் செயல்களை செய்யாமை
(இ) வினைத் தூய்மைக்கான காரணம்
(ஈ) வள்ளுவர் உவமையணியினைக் கையாளும் சிறப்பு (20 புள்ளிகள்)

04) சிலப்பதிகாரம் **துன்பமாலை** என்ற காதையில் மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) கோவலன் வருகை தாமதமடைந்தமை குறித்து கண்ணகி அடைந்த துன்பம்
(ஆ) கோவலன் கொலையுண்ட செய்தி அறிந்து கண்ணகி அடைந்த சீற்றம்
(இ) இக்காதையில் வரும் கண்ணகியின் குணப்பண்புகள்
(ஈ) கோவலன் குற்ற மற்றவன் என்பதற்கு நீர் காட்டும் நியாயங்கள் (20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

05) கைகேயி சூழ்வினைப் படலத்தில் தசரதன் கைகேயியின் காலில் வீழ்ந்து இரங்குதல் முதல் தசரதன் கைகேயியிக்கு வரத்தை கொடுத்தது வரையுள்ள பகுதியில்.

(அ) தசரதன் இராமன் மீது கொண்ட பரிவு

(ஆ) கைகேயியின் கொடுந்தன்மை

(இ) கைகேயியை தசரதன் பழித்துக் கூறியவை

(ஈ) தசரதனை கைகேயி பழித்துரைத்தமை

என்பன புலப்படுமாற்றினை தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

06) செ. கணேசலிங்கனின் நீண்ட பயணம் என்ற நாவலில்

(அ) தாழ்த்தப்பட்ட மக்களின் அவலங்கள்

(ஆ) உயர் சாதியினரின் இழிவான நடத்தைகள்

(இ) தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியலை ஆயுதமாகப் பயன்படுத்தும் திறன்

(ஈ) ஆசிரியர் கையாண்ட மொழிநடைச் சிறப்பு

என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக. (20 புள்ளிகள்)

07) விபுலானந்த அடிகளாரின் பாரதி பாடல் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) கவிதையின் ஆற்றல் பற்றி அடிகளார் கூறுவதை எடுத்துக் காட்டுக.

(ஆ) பாரத நாட்டின் பெருமை எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது என்பதை கூறுக.

(இ) கண்ணன் பாட்டில் அடிகளார் ஈடுபட்டமைக்கான காரணங்கள் எவை?

(ஈ) அடிகளாரின் மொழி நடைச் சிறப்பினைத் துலக்குக. (20 புள்ளிகள்)

agaram.lk

08) மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அ) தேம்பாவணி பைதிரம் நீங்கு படலத்தில் திருக்குடும்பத்தினர் எருசலேம் நகரை விட்டு நீங்கியமை தொடர்பாக இயற்கையின் இரக்கம்.

(ஆ) யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பாடலில் வரும் மனித விழுமியக் கருத்துக்கள்

(இ) வெறும் சோற்றுக்கே வந்தது என்ற சிறுகதையில் வள்ளியின் சிறகொடிந்த வாயிழந்த நிலை

(ஈ) இன்று உனக்கும் சம்பளமா? என்ற கவிதையில் ஆசிரியர் ஒருவரின் வறுமைத் துயரம் (20 புள்ளிகள்)



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

FWC

| தரம் :- 13 (2016) | தமிழ் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

- பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும், பகுதி II இன் 'அ' பிரிவிலிருந்து ஒரு வினாவையும் 'ஆ' பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- முதலாம் வினாவின் 'அ' பகுதியிலுள்ள இருபது வினாக்களும் தனியாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி - I

01) (அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1. 'இகரம்' ஒலி வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) இலை (2) நிலம் (3) இளமை (4) இவர் (5) வழி (..........)

1.2. வருடொலி இடம்பெறும் சொல்
(1) அறம் (2) அரம் (3) பல்லி (4) கன்னி (5) சங்கு (..........)

1.3. ஆய்தக் குறுக்கம் இடம்பெற்றுள்ள சொல்
(1) இஃது (2) எஃகு (3) கஃசு (4) அஃறிணை (5) அஃது (..........)

1.4. 'க' கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) கடம் (2) கம்பம் (3) பங்கம் (4) பக்கம் (5) வெட்கம் (..........)

1.5. பின்வருவனவற்றுள் நெடித்தொடர் குற்றியலுகரம் எது?
(1) தராசு (2) பலாசு (3) காசு (4) பாரு (5) தேனு (..........)

1.6. சாரியை ஏற்றுப் புணர்ந்த சொல்
(1) தேங்காய் (2) பனங்காய் (3) வாழைக்காய்
(4) முருங்கைக்காய் (5) பலாக்காய் (..........)

1.7. தங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம். இதில் தங்கள் என்பது
(1) படர்க்கை தற்சுட்டுப்பெயர் (2) படர்க்கை பன்மைப் பெயர்
(3) முன்னிலை பன்மைப் பெயர் (4) முன்னிலை மரியாதை ஒருமைப் பெயர்
(5) தன்மைப் பன்மைப் பெயர் (..........)

1.8. போனது போகட்டும். இதில் போனது என்பது
(1) வினையாலணையும் பெயர் (2) அஃறிணை வினைமுற்று
(3) காலங்காட்டும் தொழிற்பெயர் (4) இறந்தகால வினைமுற்று
(5) குறிப்பு வினைமுற்று (..........)

1.9. ஆடித்திங்களில் காவிரி பெருக்கெடுத்தோடும். இதில் ஆடித்திங்கள் என்பது
(1) வேற்றுமைத் தொகை (2) வினைத்தொகை
(3) பண்புத்தொகை (4) உம்மைத்தொகை
(5) இருபெயரொட்டுப் பண்புத்தொகை (..........)

agaram.lk



Scanned with CamScanner

1.10. கண்ணன் உழைப்பால் உயர்ந்தான். இவ்வாக்கியத்தில் ஆல் என்னும் உருபு தரும் வேற்றுமைப் பொருள்

(1) கொடை (2) கருவி (3) உடனிகழ்ச்சி
(4) காரணம் (5) கருத்தா (..........)

1.11. பின்வருவனவற்றுள் வல்வினைக்குப் பொருத்தமான சொல்

(1) நடப்பான் (2) தின்பான் (3) உண்பான்
(4) நிற்பான் (5) வருவான் (..........)

1.12. பகுதியால் காலம் காட்டும் ஒரு வினைச்சொல்

(1) சாய்த்தேன் (2) துன்புற்றேன் (3) போகமாட்டேன்
(4) ஓடும் (5) கண்டேன் (..........)

1.13. ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. இவ்வாக்கியத்தில் எழுதுக என்பது

(1) ஏவல்வினை (2) கடப்பாட்டு ஏவல்வினை
(3) வியங்கோள்வினை (4) விருப்பு ஏவல் வினை
(5) பயனிலை (..........)

1.14. கலங்கஞர் வினை கடிமின் கடிந்தால்..... இத்தொடரில் கடிமின் கடிந்தால் என்பன

(1) ஏவற்பன்மை, செய்ய என்ற வினை எச்சம்
(2) ஏவல் ஒருமை, செய்தால் என்ற வினை எச்சம்
(3) ஏவற்பன்மை, செய்து என்ற வினை எச்சம்
(4) வியங்கோள்வினை, நிபந்தனை எச்சம்
(5) ஏவற்பன்மை, நிபந்தனை வினை எச்சம் (..........)

1.15. கண்ணே வேண்டினும் ஈயக்கடவேன். இதில் வரும் ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்

(1) தேற்றம் (2) எதிர்மறை (3) வியப்பு
(4) வினா (5) பிரிநிலை (..........)

1.16. யாதும் ஊரே யாவரும் கேளிர் - இதில் உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

(1) ஐயம் (2) வினா (3) எண்
(4) முற்று (5) எச்சம் (..........)

1.17. கண்ணதாசன் பாடல் எழுத இளையராசா இசை அமைத்தார். இது

(1) தனிவாக்கியம் (2) கூட்டுவாக்கியம் (3) கலப்புவாக்கியம்
(4) கதம்ப வாக்கியம் (5) வாக்கியத் தொடர் எனப்படும் (..........)

1.18. குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்த சொல்

(1) மரக்கொம்பு (2) பகவை (3) இன்னிசை
(4) குருத்தோலை (5) கடுக்காய் (..........)

1.19. ஒருவர் தனது எழுபத்தைந்தாவது பிறந்த தினத்தை கொண்டாடும் விழா

(1) பொன்விழா (2) பவளவிழா (3) வைரவிழா
(4) அமுதவிழா (5) மணிவிழா (..........)

1.20. உலகநடை அறிந்து ஒழுகுதல் என்பதைக் குறிக்கும் தனிச்சொல்

(1) பண்புடைமை (2) சான்றாண்மை (3) ஒப்புரவு
(4) நல்குரவு (5) மாண்பு (..........)

agaram.lk



Scanned with CamScanner

## பகுதி - I

01) (ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. குற்றியலுகரம் என்றால் என்ன? உதாரணந் தந்து விளக்குக.
2. கூட்டுப்பெயர் பற்றி சுருக்கமாக விளக்குக.
3. செய்து என்ற வினை எச்சம் ஆக்கப்படும் முறையினை எடுத்துக் காட்டுக.
4. தன்வினை பிறவினை பற்றி கருத்துரை வழங்குக.
5. வாக்கிய இணைப்பில் ஆனால், ஆகவே என்ற இடைச் சொற்களின் பயன்பாடு பற்றி விளக்குக.

02) (அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

வாய்மை என்பது வாயின் பண்பு எனப்படும். வாயிலிருந்து வரும் வார்த்தைகள் பிறருக்கு எவ்வகையிலும் துன்பத்தைக் கொடுக்காமல் இனிமைப் பண்புடையதாக இருத்தல் வேண்டும். நாம் பிறருக்கு அளித்த வாக்குறுதிகளை மீறாதிருப்பதும் வாய்மை எனப்படும் கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம் என்று வாய்மையின் பெருமையை நாளமகாராஜன் விசுமித்திரருக்கு எடுத்துரைத்தமை குறிப்பிடத்தக்கது.

உண்மை என்பது உள்ளத்தின் பண்பு. உள்ளம் உன்னியதை பிறருக்கு ஒழியாதிருத்தல் உண்மை எனப்படும். உள்ளத்தில் உள்ளதே உதட்டில் வரவேண்டும்.

மெய்மை என்பது உடலின் பண்பு உடலும் உடலுறுப்புக்களும் தத்தமக்குரிய தொழில்களை செய்வதில் தளராமையும் பொருத்தமில்லாதவற்றை செய்யாமையுமே மெய்மை எனப்படும்.

உள்ளத்தால் உண்மையை உன்னி வாயினால் வாய்மையைக் கூறி உடம்பினால் மெய்மையாக ஒழுகி ஒருவன் நடந்து கொள்வானாயின் அவன் எல்லா வகையிலான நலன்களையும் அடைவான். ஆகவே வாய்வை மெய்மை, உண்மை என்ற மூன்று சொற்களும் தற்காலத்தில் ஒரு பொருளைத் தருமாயினும் கூர்ந்து நோக்கின் அவற்றின் செயற்பாட்டில் வேறுபாடு உண்டு.

உள்ளம் நினைத்ததை பிறர் அறியாதவாறு தக்க சூழ்ச்சிகளினால் மறைத்து சிலர் வாழ முற்படலாம். உடலுறுப்புக்களால் மெய்யொழுக்கம் உள்ளவன் போல் வெளியுலகிற்கு தன்னைக் காட்டிக் கொண்டு நடக்கலாம். வாயினால் வாய்மைக்கு மாறான வகையில் பொய்யுரைத்து வாழவும் முற்படலாம். இம்மூன்று செயற்பாட்டிலிருந்து வழுவி நடப்பவன் அரசனாயிருந்ததாலும் நிச்சயம் அவன் தண்டிக்கப்படலாம். அவன் தன் வாழ்க்கையில் பெரும் துன்பங்களை எதிர்நோக்க வேண்டிவரும். (10 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை கூறுக.

ஒருவன் சம்பாதிக்கின்ற பொருள், அனுபவிக்கின்ற பொருள் 'பழியஞ்சிய' பொருளாக இருக்க வேண்டும். பழியஞ்சுதலாவது பழிக்கு அஞ்சுதல், நாம் தேடுகிற அனுபவிக்கிற பொருளால் மற்ற ஓர் உயிருக்கு கேடு வராமலிருக்க வேண்டும். தமது பொருள் மற்றோர் உயிரைக் கலக்கி அதனை கண்ணீர் வடிக்கச் செய்யாததாக இருத்தல் வேண்டும். இது பொருளை ஈட்டுபவர்கள் உறுதியாக கொள்ளவேண்டிய முதலாம் விதி. மற்றோர் உயிர் கண்ணீர் பெருக்க நாம் வலித்து பொருளைத் தேடுவோமானால் அந்தப் பொருள் நமக்கு பெரு நட்டத்தை விளைவிக்கும். அப்படிப்பட்ட பொருள் நம்மிடம் வருமானால் அது சிறிது காலம் நம்மிடம் இருந்து பெரிய பகட்டுகள் செய்து விட்டு மெல்ல மெல்ல நம்மிடம் முன்னர் இருந்த பொருட்களையும், கௌவிக் கொண்டு ஒரு நாளைக்குப் போய்விடும். 'அழக் கொண்ட எல்லாம் அழுபோம்' ஆகவே பொருளை ஈட்டும் போது பழிக்கஞ்சி ஈட்ட வேண்டும். இது பொருளாதார சாத்திரத்தின் முதல்விதி. இனி, இரண்டாவது பாத்தூண். இதன் பொருள் பகுத்துண்டல்; நல்வழியாற் பொருளைத் தேட வேண்டும். அவ்வாறு தேடிய பொருளை அனுபவிக்கும் போது பகுத்து அனுபவிக்க வேண்டும். பொருள் பெருக்க எண்ணுகிறவர்கள் அந்தப் பொருள் மறுமையிலும் வந்து நமக்கு உதவ வேண்டுமெனில் கிடைத்த பொருளை வறியவர்களின் அறிவை அழிக்கின்ற பசியாகிய நெருப்பில் ஓமஞ்செய்து அவர்கள் வயிற்றிலே சேமிக்க வேண்டும். அப்படி சேமித்த சேமநிதியை எந்தக் குளத்திலும் எடுக்கலாம். கை நீட்ட வரும்.

(i) ஆசிரியர் தன் கருத்தை நிலை நாட்ட கையாளும் உத்திகள் எவை?
(ii) ஈட்டும் பொருள் மறுமைக்குப் பயன்பட வேண்டுமானால் நாம் செய்ய வேண்டியது என்ன?
(iii) பிறருக்கு கேடு விளையும் படி பொருளைச் சம்பாதித்தால் ஏற்படும் விளைவு என்ன?
(iv) ஆசிரியர் சேமநிதி என எதனைக் கருதுகின்றார்?

03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
(அ) சிறுவர்களைப் பேணல்
(ஆ) போதைப் பொருள் பயன்பாட்டை தடுத்தல்
(இ) தமிழியல் வளர்ச்சிக்கு பேராசிரியர் க. அருணாசலத்தின் பங்களிப்பு
(ஈ) சமுதாய மாற்றமும் இலக்கியமும்
(உ) எழுத்தறிவின் அவசியம்

## பகுதி - II

### பிரிவு 'அ'

04) (அ) சங்ககால அகப்பொருள் மரபில் அன்பின் ஐந்திணை பற்றி விளக்குக.
(ஆ) சங்ககாலத்தில் அரசர்களுக்கும் புலவர்களுக்குமிடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டுக.
(இ) சங்ககாலப் புலவர்கள் இயற்கை மீது கொண்டிருந்த ஈடுபாட்டினை விளக்குக.

05) (அ) பல்லவர்கால பக்தி இலக்கிய மரபு சோழர்காலக் காப்பியங்களில் செலுத்தும் செல்வாக்கினை ஆராய்க.
(ஆ) சோழர்காலம் காப்பிய காலம் எனக் கூறுதல் பொருத்தமுடையதோ என ஆராய்க.
(இ) பிள்ளைத் தமிழ் பிரபந்த வளர்ச்சி பற்றி சுருக்கமாகக் கூறுக.

06) (அ) விஜயநகர நாயக்கர்கால இலக்கியங்களின் பொதுப் பண்புகளை விளக்குக.
(ஆ) சோழர்கால இலக்கிய மரபிலிருந்து நாயக்கர் கால இலக்கிய மரபு எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
(இ) இக்காலத்தில் எழுந்த பொதுமக்கள் சார்பான இலக்கியங்களின் பண்புகள் பற்றி கருத்துரை வழங்குக.

### பிரிவு 'ஆ'

07) (அ) ஆரியச் சக்கரவர்த்தி கால இலக்கியத்திலிருந்து போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் கால இலக்கியம் வேறுபடுமாற்றைத் துலக்குக.
(ஆ) ஐரோப்பியர் காலத்தில் அச்சுயந்திர வருகையால் இலக்கியத்துறையில் உண்டான மாற்றங்கள் பற்றி கருத்துரை வழங்குக.
(இ) ஐரோப்பியர் கால ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் நாவலரின் முதன்மையைப் பரிசீலிக்குக.

08) மேல்வருவோருள் யாரேனும் மூவரின் இலக்கியப் பங்களிப்பினை மதிப்பிடுக.
(அ) அரசகேசரி
(ஆ) அப்துல் காதர் லெப்பை
(இ) பேராசிரியர் வி. செல்வநாயகம்
(ஈ) நீலாவணன்
(உ) கே. கணேஷ்



agaram.lk

Scanned with CamScanner

| தமிழ் - I | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

## பகுதி - I

01)

(i) (அ) கரிய அடிமரம் கொண்ட வேம்பினது ஒளி மிகுந்த பூவின் புதிய வருவாயானது என்னுடைய தலைவன் இல்லாமல் வீணாக கழிந்து போகுமோ? ஆற்றினது கரையில் வளர்ந்தோங்கிய வெள்ளிய கிளைகளை உடைய அத்தி மரத்தினது ஏழு நண்டுகள் பற்றி மிதித்த ஒற்றைப் பழம் சிதையுமாப் போல வருந்தி நிற்க குறை கூறும் கொடியவர்களின் நாவானவை காதலர் பிரிந்ததினால் பழிதூற்றிக் கல் என்று ஆரவாரம் செய்தன.
(3 புள்ளி)

(ஆ) உவமை அணிச்சிறப்பு

நண்டுகள் கனியின் அழகு சிதைய மிதித்தது போல தலைவனும் தலைவியின் நலம் சிதைய நீங்கினான். (ஊரவரின் பழிச்சொல்லுக்கு ஆளாயினாள்)

உவமேயம் - வருந்தும் தலைவியின் உள்ளம்
உவமானம் - எழுகுளிறு மிதித்த ஒரு பழம்
பொதுத் தன்மை - துன்பப்படுதல்
(3 புள்ளி)

(இ) முதல் - முல்லை - காடும் காடு சார்ந்த இடம்.
கரு - வேம்பின் பூ, அத்திப்பழம், நண்டு
உரி - இருத்தல்
(3 புள்ளி)

(ஈ) குறித்த இளவேனிற் காலத்தில் வருவேன் என்ற தலைவன் வராமை,
ஊரவர்களின் பழிச்சொல்
(3 புள்ளி)

(ii) (அ) வரத்தைத் தந்துவிட்டு இந்த வரத்தைத் தவிர்த்துக்கொள் என இரங்கி தசரதன் கைகேயியை வேண்ட, அவள் தசரனது முன்னோர் பெருமையை எடுத்துக் காட்டிய சந்தர்ப்பம்
(3 புள்ளி)

(ஆ) சிபிச்சக்கரவர்த்தி

பருந்துக்குப் பயந்து தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவை காப்பேன் என்ற சொல் பொய்க்காதபடி புறாவிற்காக தன் உடம்பையே அரிந்து கொடுக்க முற்பட்டவன்.
(3 புள்ளி)

(இ) வேற்றுமையணி

இயல்பான கருப்பொருளை எடுத்துக் கொண்டு அவற்றை ஒரு பொருளாகக் காட்டி பின்னர் வேற்றுமைப் படச் சொல்வது வேற்றுமை அணி

ஒரு பொருளைப் பற்றி எரிந்த நெருப்பு பின்னர் தணிந்து விடும். ஆனால் கைகேயி என்னும் நெருப்பு உயிரோடு கூடிய மன்னவனை பற்றி எரித்தும் தணியாது அவன் உயிரையும் கவர்ந்து கொள்கிறது. இவ்வாறு வேற்றுமை தோன்றக் கூறியதனால் வேற்றுமையணி.

அல்லது

கைகேயிக்கு நெருப்பை உவமையாகக் கொண்டு உவமையணியாக விளக்கினாலும் புள்ளிகள் வழங்குக.

(இரு அணிகளில் ஏதாவது ஒன்று)
(3 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner

(ஈ) கைகேயி இரக்கமில்லாதவள்; கொடியவள். கணவனை வருத்தும் இவள்மீது வாசகர்களுக்கு வெறுப்புணர்வு ஏற்படுகின்றது. (3 புள்ளி)

02) (அ)

(i) உழவர்கள், நெசவாளர், வீரர், கவிஞர் போன்றோரை தொழிலாளர்களாக காட்டுதல்.
இயற்கையை தொழிலாளராக காட்டுதல்.
உ-ம்:- சூரியன், காற்று, நதி, வானம், மேகம், பனித்துளிகள், சந்திரன்
கடவுளின் படைப்பும் ஒரு தொழிலே. (4 புள்ளி)

(ii) தொழில் இல்லையெனில் இவ்வுலகம் அழிந்துவிடும்.
அச்சமில்லாத நிலையான பெருமைக்குரியது
பயமில்லாத ஆக்கச் செயற்பாடு
அழகற்றதை அழகாக்குவது
களங்கமில்லாத கற்பும் தொழிலே (4 புள்ளி)

(iii) தொழிலாளர் சக்தி ஓங்கி வளர்வதற்கு உதவுதல்
தொழிலாளர்களுடைய வறுமை நிலையைப் போக்குதல்
தொழிலாளர் துயர்நிலை தொடர்பாக கவிதைகள் எழுதுதல் (4 புள்ளி)

(iv) உருவகம்
இருட்சாணம்
உடுவாம் அரும்புள்ளிக்கோலம்
உவமை
கிளிமூக்கு நிறப்பொட்டு
வைரச் சிரிப்பு
அந்திவானம் வேழமென விண்ணில் பறந்து
பொன்நெல்
கண்துயிலை நேர் மரணம்
கண்ணின் விழிப்பு காட்டு நிகர் ஜனனம் (4 புள்ளி)

agaram.lk

(ஆ)

(i) அகலிகை கோதமன் மனநிலை
- ✶ சாபவிமோசனம் பெற்ற மனநிலை
- ✶ விமோசனமளித்தவனை அறியும் ஆவல்
- ✶ மாயவேஷத்தால் ஏமாறி தன்னை மாசுபடுத்தியவள்
- ✶ கோதமனை கண்டதும் மிரளுதல்

கோதமனது நிலை
- ✶ தன்னை மறந்து நிஷ்டையில் இருந்தமை
- ✶ பெண்ணின் கேவலத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இயலாதவன்
- ✶ வாழ்க்கையை துன்ப வலையாக எண்ணுதல்
- ✶ சாபவிமோசனத்தின் பின் வாழ்க்கைக்கு அஞ்சுதல் (4 புள்ளி)

(ii) அகலிகையின் பிணைப்பிலிருந்து என்னதான் இருந்தாலும் கோதமனால் மீள முடியவில்லை என்பதை உணர்த்துகின்றது. (4 புள்ளி)

(iii) ✶ வலை முட்டையில் மோனத் தவம் கிடக்கும் பட்டுப்பூச்சி
✶ உடலிலே காய கற்பகம் செய்ததுபோல (4 புள்ளி)

(iv) விமோசனம் - கடைத்தேறும் வழி
பவித்திரம் - புனிதம்
நிஷ்டை - ஆழ்ந்த தியானம்
காய கற்பம் - உடல் வலுவை கூட்டும் மருந்து (4 புள்ளி)



Scanned with CamScanner

## பகுதி - II

03) (அ) செய்யப்படும் செயல் பிறருக்கு தீங்கு செய்யாத தூய்மையானதாக இருத்தல் முதலாம் பாடல் விளக்கம்

(4 புள்ளி)

(ஆ) ✶ தீமை பயக்கும் செயல்களை செய்யாமை
✶ புகழ் கெட வரும் செயல்களை தவிர்த்தல்
✶ துன்பத்தை நீக்கும் பொருட்டு இழிவான செயல் செய்யாமை
✶ பழிபாவச் செயல்களை செய்யாமை
✶ தாயின் பசியை நீக்குவதற்காகவும் இழிந்த செயலை செய்யற்க
(2 - 6 குறட்பாக்கள் எழுதப்பட வேண்டும்)

(6 புள்ளி)

(இ) ✶ நிலையற்ற செல்வத்திற்காக நிலையான பழியை தேடலாகாது.
✶ பெரியோர்களால் விலக்கப்பட்ட தீய செயல்களை செய்தால் துன்பமே வரும்.
✶ பிறரை துன்புறுத்தி சம்பாதிக்கின்ற செல்வம் சம்பாதித்தவனையே துன்புறச் செய்து விட்டுப் போய்விடும்.
✶ தீய செயலால் தேடிய பொருள் அழிவதோடு தேடியவனும் கெடுவான்
(7 - 10 குறட்பாக்கள்)

(6 புள்ளி)

(ஈ) உவமையணி

10 வது குறட்பா எழுதி விளக்கப்பட வேண்டும்
உவமேயம் - தீயசெயலால் சேர்த்து வைக்கப்பட்ட பொருள்
உவமானம் - பச்சை மண்ணால் செய்யப்பட்ட பாத்திரத்தில் நீரைச் சேகரித்து வைத்தல்
பொதுத்தன்மை - தானும் அழிந்து இருந்த இடத்தையும் அழித்தல் (4 புள்ளி)

04) (அ) சிலம்புவிற்க சென்ற கணவன் இன்னும் திரும்பிவரவில்லை. இதனால் அவளது உள்ளம் கலங்கி துன்புற்றது. கொல்லன் உலைக் களத்தில் ஊதுகின்ற நெருப்பும் தோற்கும்படியாக மூச்சு நெருப்பு எழ உயிர்த்தது.

பகற்பொழுதிலேயே கண்ணகியை நடுங்கச் செய்கின்ற துன்பம் மிகுதியாயிற்று. காதலன் மீண்டு வாராமையால் உள்ளம் வருந்தியது.

ஆருயிர் தலைவன் இன்னும் வரவில்லை. என் கணவனை யாரோ வஞ்சகப்படுத்தி விட்டனர். இதனால் தனது உள்ளம் மயங்குவதாக துன்புறுகின்றாள். (4 புள்ளி)

(ஆ) பொங்கியெழுந்தாள், விழுந்தாள், செங்கண் சிவப்ப அழுதாள், தன் கணவனை நினைத்து எங்கேயிருக்கின்றீர்கள் எனக் கூறிக் கதறி சீற்றம் கொள்வாள்.
சீற்றத்தின் வெளிப்பாடு - கைம்பை நோன்பு நிலைகுறித்துப் பேசுதல்
தவறுக்கு காரணம் பாண்டிய மன்னனே என சீற்றம் கொள்ளல் - தன் கணவனை கள்வன் என்று கூறியதே பொறுக்க முடியாத சீற்றத்திற்கு காரணம்.
அறன் எனும் மட்வோய் என அறக்கடவுளையும் பேசுதல் (8 புள்ளி)

(இ) குடும்ப பெண்ணாக வாழ்ந்தவளின் கோலத்தை கோவலனது கொலை மாற்றியமைத்தது.
கோவலன் மீது அவள் கொண்ட அன்பு - அன்பன், தலைவன், காதலன் எனக் கூறல்.
கணவன் மீது ஏற்பட்ட பழி துடைப்பதில் காட்டும் ஆர்வம்
துணிவு, அஞ்சாமை முதலிய பண்புகள்
கற்புடைப் பெண்டிராக விளங்குதல் (4 புள்ளி)

(ஈ) கண்ணகியின் கூற்று

தவறு செய்தவன் பாண்டியனேயன்றி கோவலன் அல்ல.

சூரியபகவானின் கூற்று (4 புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner

05) (அ) ★ இராமன் காடு செல்வதைத் தடுக்க கைகேயியின் காலில் விழுதல்.

★ பெண்ணே வண்மை கேகயன்மானே
மண்ணே கொள் மற்றயது ஒன்று மற என கேட்டமை.

★ என் மகன் என் கண் என் உயிர்
எல்லா உயிர்கட்கும் நன்மகன் எனக் கூறுதல்

★ இராமன் என் கண்ணெதிரே சென்றால் தான் உயிர்
வாழேன் எனக் கூறுதல் (5 புள்

(ஆ) பேயினும் கொடியவள்
தன்னேரில்லா தீயவள்
நச்சுத்தீயே பெண்ணுரு
முனிவு எஞ்சாள், மரந்தான் எனும் நெஞ்சினன்
இல்முறை நோக்காள்
தன் செயலுக்கு நாணாள்
பாயும் கனலே போல் எரிந்து ஆறாது இன்னுயிர் உண்ணும் எரியன்னாள் (5 புள்

(இ) ★ தம் கணவர் இறப்பதற்கு முன்ரே குலமகளிர் இறந்து விடுவர்
நீயோ உயிரோடு என்னைக் கொல்லுகின்றாய்.

★ குலமகளிர் ஒழுக்கத்தை பாராய், தர்மத்தை நினைக்கிறாய் இல்லை
நாக்கு என்னும் அம்பினால் என்னை கொன்றுவிட்டாய்.

★ நாணத்தின் இயல்பறியாத பெண்கள் பெண்களே அல்ல.

★ பழியாகிய கடலுக்குள் உன் மகனோடு அழுந்துவாய் (5 புள்

(ஈ) ★ தந்த வரத்தை தவிர்க்குமாறு கேட்டல் நல்லறமாகுமோ?

★ இவ்வுலகில் சத்தியத்திற்கு யார்தான் உளர்

★ கேட்ட வரத்தை தராவிடில் உயிர் விடுவேன் எனல்

★ சிபிச் சக்கரவர்த்தியை உதாரணம் காட்டிப் பழித்தல் (5 புள்

06) (அ) ★ கிராமத்தில் உள்ள எல்லாப் பாடசாலைகளிலும் கல்வி பெற முடியாத நிலை

★ விரும்பியவாறு பெயர் வைத்துக்கொள்ள முடியாத நிலை

★ ஆடை ஆபரணங்கள் அணிதல், போக்குவரத்துச் செய்தல், கடைகளில் உண
உண்ணல் இவற்றுக்கான தடை

★ கோயில்களில் உட்பிரவேசிக்க முடியாத பல தடைகள்

★ நீதியை பெற முடியாமை (5 புள்

(ஆ) ★ திருட்டுத்தனம் சாராயம் காய்ச்சும் தொழிலில் பெண்கள் ஈடுபட்டமை

★ இலுட்டுத்தாலிக் கொடியை காட்டி ஏமாற்றுதல்

★ குடும்ப கௌரவம் பாராது காதலித்தவுடன் கூட்டிக்கொண்டு ஓடுதல்

★ தவறான உறவு நிலைகள் - உ-ம்: கதிராசியின் எதிர்வீட்டில் வாழ்ந்த இராசம்மா

★ புனிதமான நாட்களிலும் மாமிசம், சாராயம் போன்றவற்றை வேண்டியவர்களு
வழங்குதல்

★ பெண்களே ஒருவனை அடித்துக் கொல்லுதல்

★ தேர்தல் வெற்றிக்கு குறுக்கு வழிகளைக் கையாளுதல் (5 பு

agaram.lk



Scanned with CamScanner

(இ) * உயர் வகுப்பினரின் கபடத் தனத்தை எடுத்துக் காட்டுதல்
* சமூக விடுதலைக்கு உள்ளூராட்சி தேர்தலை பயன்படுத்தல்
* குரும்பையூரில் கிடைத்த வெற்றி
* ஒற்றுமையை வலியுறுத்தல்
* சமூக விடுதலை என்பது ஒரு நீண்ட பயணம் என மாதவனின் விழிப்புரை
* தேர்தலில் வெற்றி பெற்றதனூடாக ஏற்றத் தாழ்வை ஒழித்தல்
* ஆலயப் பிரவேசம் தொடர்பான போராட்டங்களை முன்னெடுத்தல் (5 புள்ளி)

(ஈ) * யாழ்ப்பாண பேச்சுத் தமிழ்
* ஆசிரியர் கதை கூறற் பகுதியில் எழுத்துத்தமிழ்
* நீண்ட, குறுகிய வாக்கியம்
* யதார்த்த பூர்வமான வர்ணனை
* மரபுத் தொடர், அடுக்குத்தொடர், இரட்டைக் கிழவி, இணைமொழிகளைப் பயன்படுத்தல்
* பழமொழிகளைக் கையாளுதல்
* பொருத்தமான உவமைகள் (5 புள்ளி)

07) (அ) * குழந்தை முதல் முதுமைப் பருவம் வரை மனதுக்கு ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் கொடுப்பது.
* குழந்தையை உறங்கச் செய்தல், பாலப்பருவத்தில் ஒத்த வயதினருடன் பந்தாடும் போது மகிழ்ச்சி தருவது, முதுமைப் பருவத்தில் இளமையை நினைவூட்டி மகிழவைப்பது.
* பிரான்ஸ் நாட்டில் சமத்துவம் சகோதரத்துவத்தை ஏற்படுத்தியது.
* இந்திய நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுத்தது.
* உயிரற்ற வெற்றுடம்புக்கும் உயிர் கொடுப்பது. (5 புள்ளி)

(ஆ) * பாரதநாடு ஞானம், படைவீரம், உடல் வலிமை போன்றவற்றில் உயர்வானது.
* மன்னும் இமயமலை எங்கள் மலை
* இலங்கை அரக்கர் அழிய முடித்தவில் - நவரத்தினமாலை பாடற்பகுதி
* அறநெறியினின்று வழுவாத நாடு
* தமிழ்தாய், செந்தமிழ் நாடு, தமிழ் பெருமை வாய்ந்த நாடு (5 புள்ளி)

(இ) தொன்று தொட்டு கண்ணனை வழிபாடு செய்தமை
பக்தி சுவை ததும்புவன
வேதசம்ஹிதைகளின் நடையும் பொருளும் கொண்டமை
புதிய நடையும் புதிய கருத்துக்களும் கொண்டமைந்தமை
பல்வேறு பாவனைகளில் பாடப்பட்டமை (5 புள்ளி)

(ஈ) * பொதுவாக அடிகளாரின் மொழிநடை புலமை நடை எனப்படும்.
* இலக்கண மரபு வழுவாத இயல்பு
* ஒழுகிசை நிறைந்த சொல்லாட்சி
* வாக்கிய அமைப்பு கலப்பு - கதம்ப வாக்கியம்
* பிற மொழிக் கலப்பற்ற தடை - சுவை கூறும் பகுதியில் வடசொற் பயன்பாடு
* கவிதையும் உரைநடையும் கலந்தமை (5 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner

08) (அ) ✶ அகழி நீரும் அதிலுள்ள தாமரை மலரும் இரங்கியமை

✶ பிறைச் சந்திரனது தோற்றம்

✶ வானமும் சோலையும் கண்ணீர் விட்டு அழுதமை

✶ துயரத்தின் கொடுமை கிழக்கு வானம்

(கோழிகள், பறவைகள் சேர்க்கபடலாகாது)

விளக்கி எழுதப்பட வேண்டும். (10 புள்ளி)

(ஆ) ✶ நாம் எந்த இடத்தில் வாழ்கிறோமோ அதை நமது சொந்த ஊராகக் கொள்ளுதல்

✶ உலக மக்களை உறவினர்களாக கொள்ளுதல்

✶ எமக்கு வரும் நன்மை தீமைகள் நாமாக தேடிக்கொண்டமை

✶ வாழ்க்கை பற்றிய நிலை - துன்பமுமில்லை மகிழ்சசியுமில்லை

✶ ஊழின் வழியே உயிர் செல்லும்

✶ பெரியோரை புகழ்வதுமில்லை பழிப்பது இல்லை

✶ இறப்பு நிச்சமானது (10 புள்ளி)

(இ) வள்ளி தன் பெற்றோரிடம் வளரும் போது சுதந்திரமாகவும் உரிமையோடும் வாழ்ந்த நிலை பறிபோனமை

வள்ளிக் கென்ற விதிக்கப்பட்ட நிலை

இவை விளக்கமாக கூறப்பட வேண்டும். (10 புள்ளி)

(ஈ) அறுந்த செருப்பை தைக்க முடியாத நிலை

கிழியும் நிலையில் உள்ள ஆடை - புதியது வாங்க வழியின்மை

நல்ல குடையின்மை

பிள்ளையின் படிப்பிற்கு செலவளிக்க முடியாத நிலை

கடன்பட்டோரிடம் அவமானம்

சம்பள நாளன்று வீடு செல்லாது கடற்கரைக்குச் சென்றமை (காரணம் விளக்கப்படவேண்டும்)

கடலிடம் உனக்கும் சம்பளமா? எனக் கேட்டல் (10 புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தமிழ் - II | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

## பகுதி - I

01) (அ)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1.1. | 3 | 1.6. | 2 | 1.11. | 1 | 1.16. | 4 |
| 1.2. | 2 | 1.7. | 3 | 1.12. | 2 | 1.17. | 2 |
| 1.3. | 4 | 1.8. | 1 | 1.13. | 3 | 1.18. | 4 |
| 1.4. | 3 | 1.9. | 5 | 1.14. | 5 | 1.19. | 2 |
| 1.5. | 3 | 1.10. | 4 | 1.15. | 5 | 1.20. | 3 |

(1 × 20 = 40 புள்ளிகள்)

(ஆ)

1. குறுகி ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும். இதற்குரிய மாத்திரை அரை என இலக்கணநூல்கள் கூறுகின்றன. தனிக்குற்றெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்களின் பின் சொல்லின் இறுதியில் வல்லின மெய்யில் ஏறி வரும் உகரம் குறுகி ஒலிக்கும். அவை ஈற்றயலெழுத்தைக் கொண்டு ஆறு வகைப்படும் எனக் கூறுவர்.

   வன்தொடர் - நாக்கு
   மென்தொடர் - பஞ்சு
   இடைத்தொடர் - மார்பு
   ஆய்தத்தொடர் - எஃகு
   உயிர்தொடர் - வரகு
   நெடிற்றொடர் - காசு (2 புள்ளி)

2. இரண்டு அல்லது பல சொற்களை இணைந்து உருவாக்கப்படும் பெயர்ச்சொற்கள் கூட்டுப் பெயர் எனப்படும். உ-ம்: வானொலி, பல்கலைக்கழகம்
   பெயருடன் பிறிதொரு பெயர் இணைந்து வருதல் ஒருவகை
   வான் + ஒலி = வானொலி
   ஒரு வினைச் சொல்லுடன் ஒரு பெயர்ச்சொல்லை இணைத்து ஆக்குவது இன்னொரு வகை.
   உ-ம்: சுடு + சோறு = சுடுசோறு (2 புள்ளி)

3. செய்து என்ற வாய்ப்பாட்டு வினை எச்சம் உ, இ, ய் ஆகிய மூன்று விகுதிகளைப் பெற்று ஆக்கப்படும்.
   1) வினையடி + இறந்தகால இடைநிலை + உகரவிகுதி.
      உ-ம்: செய் + த் + உ = செய்து
   2) உகர ஈறு கொண்ட வினைப் பகுதி இகரவிகுதி பெற்று ஆக்கப்படும்
      ஓடு + இ = ஓடி; திருத்து + இ = திருத்தி
   3) தனி நெடில் ஏவற் பகுதி யகர மெய் சேர்ந்து ஆக்கப்படும்.
      உ-ம் : போ + ய் = போய் (2 புள்ளி)

4. வினையின் பயன் கருத்தாவை அல்லது எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும். தன்கருத்தா வினை தன்வினை. உ-ம் : தம்பி உருண்டான்
   இதனை இயங்குவினை என்று கூறுவர்
   வினையின் பயன் எழுவாயை சேராமல் பிறிதொன்றை சேருமாயின் அது பிறவினை எனப்படும். உ-ம் : தம்பி பானையை உருட்டினான்
   இது இயக்குவினை எனப்படும்
   (முக்கிய குறிப்பு :- பிறவினைகள் எல்லாம் செயப்படுபொருள் குன்றாவினை) (2 புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner

5. முரணான கூற்றுக்கள் கொண்ட வாக்கியங்களை இணைப்பதற்கு 'ஆனால்' என்ற இடைச்சொல் பயன்படுத்தப்படும். உ-ம் :
வானம் இருண்டிருக்கிறது ஆனால் மழை பெய்யாது.
ஒரு வாக்கியத்துடன் தொடர்புடைய உடன்விளைவு தரும் இன்னொரு வாக்கியத்தை இணைக்க 'ஆகவே' பயன்படும். உ-ம் :
வானம் இருண்டிருக்கிறது ஆகவே மழை பெய்யும். (2 புள்ளி)

02) சுருக்கம்

(அ) ✶ வாய்மை, உண்மை, மெய்மை என்பன ஒரு பொருளை உணர்த்துவதாயினும் அவற்றிற்கிடையே நுண்மையான வேறுபாடு.

✶ வாய்மை - கூறும் வார்த்தை பிறருக்கு துன்பத்தை கொடுக்கக்கூடாது.

✶ உண்மை - உள்ளத்தில் உள்ளதை பிறருக்கு ஒழியாது இருத்தல்

✶ மெய்மை - பொருத்தமில்லாதவற்றை உடலால் செய்யாதிருத்தல்

இம்மூன்று செயற்பாட்டிலும் வழுவா நடப்பவன் எவனாக இருந்தாலும் தண்டிக்கப்படுவான் (10 புள்ளி)

குறிப்பு: கருத்து ஒழுங்கமைவுடன் 45 - 55 சொற்களுக்கிடையில் எழுதப்பட்டால் முழுப்புள்ளியும் வழங்கலாம்.
சொற்கள் கூடிக்குறைந்தால் புள்ளிகளை குறைக்குக.

(ஆ)

(i) பொருளாதார சாத்திர விதிகளையும் பொது விதிகளையும் பின்பற்றல். குறட்பாக்களை உதாரணம் காட்டி விளக்கல்.

(ii) ஈட்டும் பொருள் மறுமையில் பயன்பட வேண்டுமானால் பகுத்துண்டு வறியவர்களின் பசியைப் போக்க வேண்டும்.

(iii) பிறரை வருத்தி சம்பாதித்த பொருள் பெரிய பகட்டுகள் செய்து விட்டு, எம்மிடம் முன்னர் இருந்த பொருளையும் கௌவிக்கொண்டு போய்விடும். அழக்கொண்ட எல்லாம் அழபோம்.

(iv) வறியவர்களின் வயிறு. வறியவர்களின் அறிவை அழிக்கின்ற பசியாகிய நெருப்பில் ஓமம் செய்ய வேண்டும். ($2\frac{1}{2} \times 4 = 10$ புள்ளி)

03) (அ) சிறுவர்களைப் பேணல்

✶ சிறுவர் பற்றிய வரைவிலக்கணம்

✶ சிறுவர் நலன் பேணும் உரிமைகள்

✶ சிறுவர்களின் இன்றைய நிலை
பாலியல் துஷ்பிரயோகம்
சிறுவர் கொலை செய்யப்படுதல்
கல்விக் கூடம் செல்லாமை
வறுமை காரணமாக வேலைக்கு செல்லல்

✶ இதற்கான அடிப்படைகளை விளக்குதல்

✶ சிறுவர் நலம் பேண எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

(ஆ) போதைப் பொருள் பயன்பாட்டை தடுத்தல்

✶ போதைப் பொருள் பற்றிய விளக்கம்

✶ எமது நாட்டில் அறிமுகமாகிய விதமும் காரணங்களும்

✶ போதைப் பயன்பாட்டின் இன்றைய நிலை

✶ விழிப்புணர்விற்கான நடவடிக்கைகள்

(இ) பேராசிரியர் க. அருணாசலம்

✶ அறிமுகம்
காலம்
பிறப்பு
கல்வி


agaram.lk
Scanned with CamScanner

* ஈடுபட்ட ஆய்வுத்துறைகள்

(அ) மலையக இலக்கியப்பணி - மலையகத்தமிழ் இலக்கியம் தேசிய சாகித்திய மண்டலப் பரிசு - சாதனையாளரசாரல் நாடான் என்ற நூல் மலையக தமிழ் நாவல்கள்

(ஆ) தமிழியல் ஆய்வு - இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் என்ற நூல்; சாகித்திய மண்டலபரிசு;
காலக்கண்ணாடி இளங்கதிர் - என்ற நூல்

(இ) நவீன தமிழ் இலக்கிய ஆய்வு - ஈழத்து தமிழ் சிறுகதைகள், தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், (இந்நூலுக்கு பொன்னம்பல முதலியார் நினைவுப் பரிசு)

(ஈ) ஈழத்தமிழ் இலக்கிய ஆய்வு

(உ) பிறநூல்கள் - பாரதியார் சிந்தனைகள், விபுலானந்தரின் சமயச் சிந்தனைகள், இளந்தலைமுறையும் கல்வியும், தமிழகத்தில் சமணம்

(ஊ) பெற்ற விருதுகள் - ஆறு தடவை சாகித்திய மண்டலப் பரிசு
சாகித்திய ரத்னா விருது (மிக உயர்வானது)

(ஈ) சமுதாயம், இலக்கியம் பற்றிய விளக்கம்

* சமுதாயத்தலிருந்து ஊற்றெடுத்தல்
  ஆக்கப் பசிகொண்ட ஒருவனுக்கு அவனறிந்த சமுதாயம் ஓர் அமுதசுரபி
* சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் ஓர் பிரசாரக் கருவி இலக்கியம்
* இலக்கிய வரலாற்றில் இதற்கான சான்றுகள்

(உ) எழுத்தறிவு பற்றிய விளக்கம்

* பல்வேறுபட்ட சூழ்நிலைகளுடன் தொடர்புபட்டு எழுதப்பட்டவற்றை அடையாளம் காண்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், தொடர்பு கொள்வதற்கும், கணிப்பதற்குமான திறனைக் குறிக்கும் - யுனெஸ்கோ நிறுவனம்
* எழுத்தறிவு பெற்றோர் நிலை
* எழுத்தறிவின் முக்கியத்துவம்
* எழுத்தறிவிற்கு தடையாக இருப்பவை
* எழுத்தறிவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் (20 புள்ளி)

agaram.lk

## பகுதி - II

### பிரிவு 'அ'

04) (அ)
* அன்பின் ஐந்திணை என்பது அன்புடைக்காமம்
* ஒத்த அன்புடைய தலைவன் தலைவியர்க்கிடையே நிகழ்வது
* திணைக் கோட்பாட்டு அடிப்படையில் முதல், கரு, உரிப் பொருளை அடிப்படையாகக் கொண்டது.
* குறிஞ்சி - களவு / புணர்தல்
  முல்லை - இருத்தல்
  மருதம் - ஊடல்
  நெய்தல் - இரங்கல்
  பாலை - பிரிதல் / உடன்போக்கு
* "மக்கள் நுதலிய அகனைந்திணையும் சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்" என்ற வரையறை
* கூற்றுக்களாக அமைதல்
* ஒருபாட்டு, ஒருதுறை, ஒரு உணர்ச்சி
* அகவல், கலிப்பாவினால் ஆக்கப்பட்டன.
* உள்ளுறை உவமம் இறைச்சிப் பொருள் பயன்பாடு (5 புள்ளி)



Scanned with CamScanner

(ஆ) ✱ அரசர்க்கும் புலவர்க்கும் நெருக்கமான தொடர்பு

✱ அரசவையில் ஆலோசகர்களாகவும் தூதுவர்களாகவும் காணப்பட்டனர்.

✱ அரசர்களுக்கு புலவர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் நல்லறிவு புகட்டியமை

✱ அரசர்களுக்கிடையே நிகழும் போரைத் தடுத்து நிறுத்தியமை

✱ முக்கியமான அரசர் புலவர் உறவு
அதியமான் நெடுமான் அஞ்சி - ஔவையார்
பாரி - கபிலர்

✱ புலவருக்கு அரசன் தாமரை வீசிய சம்பவம் (5 புள்ளி)

(இ) ✱ புலவர்கள் இலக்கியத்திற்கு முதற்பொருளாக மக்களையும் துணைப்பொருளாக இயற்கையையும் கொண்டமை

✱ ஐவகை நிலங்கள் இயற்கை அடிப்படையில் பிரித்தல்

✱ நிலங்களுக்குத் தாவரங்களின் பெயரையும் பூக்களின் பெயரையும் வைத்தல்

✱ சில நூல்களுக்கு இயறகையின் பெயர் சூட்டல்
முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை

✱ உள்ளுறை, உவமம் போன்ற அணிகளை இயற்கையில் இருந்து எடுத்துக் காட்டுதல்

✱ தம் பெயரை இயற்கையோடு இணைத்தல். உ-ம்:
செம்புலப் பெயனீரார், அணியாடு முன்றிலார், கயமனார்

✱ சங்க காலம் இயற்கை நெறிக்காலம் எனப்படுதல். (5 புள்ளி)

05) (அ) ✱ பல்லவர்கால திருத்தொண்டர் தொகையும், திருத்தொண்டர் திருவந்தாதியும் பெரிய புராணம் என்ற காவியம் தோன்ற அடிப்படை

✱ பல்லவர் கால பக்தி இலக்கியமரபு - பெரிய புராணம் கம்பராமாயணத்தில் பின்பற்றப்படல்

✱ 'அங்கண் நெடுமதில்' என்ற தில்லை நகர் திருச்சித்திரகூட திருமொழி (குலசேகர ஆழ்வார்) கம்பராமாயாணத்திற்கு வழிகாட்டியமை

✱ உலகியல் வாழ்வினூடாக வீடு பேறு அடையலாம் என்ற பக்தி இலக்கியமரபு காப்பியங்களில் பிரதிபலித்தல்

✱ பல்லவர்கால புராண இதிகாச கதை மரபுகள் காப்பியங்களுக்கு ஊற்றாக அமைதல்

✱ பல்லவர்காலக் கதைகள் காப்பியங்களில் பின்பற்றப்படல் - உ-ம்: அணில் கதை

✱ பக்தி இலக்கிய விருத்தப்பா காவியங்களில் உயிர் நாடியாக அமைதல் (5 புள்ளி)

(ஆ) ✱ சோழர் காலத்திற்கு முன்னும் பின்னும் எழுந்த நூல்களை ஒப்பிடுவதன் மூலம் சோழர் காலத்தை காப்பிய காலமாகக் கொள்ளல்

✱ பெருங்காப்பியம் மூன்றும், சிறுகாப்பியம் ஐந்தும் காப்பிய மரபுசாராத மூன்று காவியங்களும் மொத்தம் பதினொரு நூல்கள் காப்பியங்களாக தோன்றின. (பெயரிடுக)

✱ பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என்று பாகுபாடு செய்யுமளவிற்கு சோழர் காலத்தில் காப்பியங்கள் தோன்றின. அதனால் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை போன்றோர் இக்காலத்தை காப்பிய காலம் எனக் கூறுவர்.

✱ காப்பியத்தின் தோற்றம், காப்பியத்தின் உச்சம், காப்பியத்தின் தேய்வு மூன்றும் இக்காலத்தில் நிகழ்ந்துள்ளமையாலும் இதனை காப்பிய காலம் என்பர். உ-ம்:
தோற்றம் - சீவகசிந்தாமணி
உச்சம் - கம்பராமாயணம்
தேய்வு - கந்தபுராணம்

✱ காப்பியம் தோன்றுவதற்குப் பொருத்தமான சூழ்நிலை காப்பிய இலக்கணம் கூறும் நூல்கள் தோன்றியமை. (5 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner

(இ) ✶ பிள்ளைத் தமிழ் பிரபந்த இலக்கணம்

✶ பல்லவர் கால பக்தி இலக்கியத்தில் காணல்

✶ குலசேகர ஆழ்வார் இராமனை மகனாகவும் தன்னை தசரதனாகவும் பாவனை செய்தல்

✶ பெரியாழ்வார் கண்ணனை குழந்தையாகவும் பாவனை செய்தல்
கண்ணனின் பிறப்பு, அவன் அழகு, தாலாட்டு, நிலாவை அழைத்தல், முலையுண்ணுமாறு அழைத்தல் என ஒவ்வொரு பருவத்தையும் பத்துப் பாடல்களில் அமைத்துப் பாடியமை

✶ பெரியாழ்வார் திருமொழியில் வரும் மாணிக்கம் கட்டி, சீதக் கடல் போன்ற தொடர்கள் பிள்ளைத் தமிழ் பிரபந்தத்தை நினைவுபடுத்துவன.

✶ இவற்றின் பின்னணியில் குலோத்துங்கன் சோழன் பிள்ளைத் தமிழாக வளர்ந்தது.

✶ பிற்காலத்தில் நாயக்கர் காலம் இருபதாம் நூற்றாண்டிலும் பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் தோன்றின. (5 புள்ளி)

06) (அ) பழமை போற்றுதல்
சமயச் சார்பு
தத்துவச் சார்பு
வசைபாடுதல்
பக்தி இலக்கியம்
வடமொழிச் செல்வாக்கு
பொதுமக்கள் சார்பு
வித்துவத்தை வெளிப்படுத்தும் சொல்லணிகள்
சிற்றிலக்கியங்கள்
தனிப்பாடல் மரபு (5 புள்ளி)

agaram.lk

(ஆ)

| சோழர் காலம் | நாயக்கர் காலம் |
|---|---|
| உலகியல் சார்பு | சமயச்சார்பு, பழமை, தத்துவம் |
| வாழ்த்துக்கவி | வசைக் கவி |
| அரசன் புகழ் பாடுதல் | பிற்காலத்தில் பொதுமக்கள் சார்பு |
| காப்பியங்கள் | தலபுராணங்கள் |
| தொடர்நிலைச் செய்யுள் | தனிப்பாடல் |
| பொருள் அணி | சொல்லணி |
| கவித்துவம் | வித்துவம் (5 புள்ளி) |

(இ) ✶ குறவஞ்சி - திருக்குற்றாலக் குறவஞ்சி, கொடுமளூர்க் குறவஞ்சி
நொண்டி - திருச்செந்தூர் நொண்டி நாடகம், குலத்தூர் நொண்டி நாடகம்
பள்ளு - முக்கூடற் பள்ளு
கீர்த்தனை - கிராம நாடக கீர்த்தனை
சித்தர் பாடல்கள்

✶ சாதாரண பொதுமக்கள் பாத்திரம்

✶ நாடகப் பாங்கு

✶ இசைப்பாங்கு

✶ நகைச்சுவை

✶ பேச்சு வழக்குமொழி

✶ உலகியல் நோக்கும் சமயச் சார்பும் (5 புள்ளி)



Scanned with CamScanner

## பிரிவு 'ஆ'

07) (அ) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம்

* கிறிஸ்தவ இலக்கியம்
* சோதிட வைத்திய நூல்கள் ஒரு சில.
* பொதுமக்கள் சார்பு இலக்கியம்
* பரவலாக நாடக இலக்கியங்கள்
* விரத மகிமை கூறும் புராணம்
* உரை நூல்களின் தோற்றம்
* மொழிபெயர்ப்பு முயற்சிகள் குறைவு
* நெகிழ்ச்சியான மொழிநடை

ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்

சைவ இலக்கியம்

அரசன் பெயர் தாங்கிய சோதிட வைத்திய நூல்கள்

இவ்வகை இலக்கியம் மிகக் குறைவு

நாடக இலக்கியம் தோன்றவில்லை

தல புராணங்கள்

செம்மொழிப்பாங்கான இலக்கியம்

மொழி பெயர்ப்பும் தழுவல் முறையும்

இறுக்கமான மொழிநடை (5 புள்ளி)

(ஆ)
* அச்சுயந்திர சாலைகளின் பரம்பல் பற்றிய சிறுகுறிப்பு
* ஏட்டுச் சுவடியில் முடங்கிய இலக்கண இலக்கியங்கள் நூல்வடிவம் பெற்றமை
* குறிப்பிட்ட பிரிவினர் மட்டத்தில் விளங்கிய இலக்கிய அறிவு பொது மக்களிடம் சென்றமை
* பத்திரிகைகளின் தோற்றம்
* பதிப்பு முயற்சிகளின் விரிவாக்கம்
* உரைநடை வளர்ச்சி (5 புள்ளி)

(இ)
* உரைநடை வளர்ச்சியில்
* பதிப்பாசிரியர் என்ற முறையில்
* பாடநூலாக்கத்திற்கு உதவியவர் என்ற வகையில்
* செய்யுள் நூல்களை வசன வடிவில் கொணர்ந்த வகையில்
* இலக்கண நூலாசிரியர் என்ற வகையில்
* தேசிய இலக்கிய முன்னோடி என்ற வகையில் (5 புள்ளி)

agaram.lk

08) (அ) அரசகேசரி

* ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு களம் அமைத்தவர்
* ஈழத்தின் முதல் காப்பிய ஆசிரியர் - இரகு வம்சம்
* இரகுவம்ச நூலின் சிறப்பு - அரச காவியத்தை வளர்த்தமை
* மூல நூலில் இல்லாத சில பகுதிகளை புதிதாக சேர்த்தமை. உ-ம்: ஆற்றுப்படலம், நகர்படலம், நாட்டுப் படலம்
* அரசகேசரி வளவு, அரசகேசரிப் பிள்ளையார் - இதன் ஊடாக அவரது முக்கியம் (5 புள்ளி)

(ஆ) அப்துல் காதர் லெப்பை

* பிறப்பிடம் கிழக்கிலங்கை காத்தான் குடி
* மணிக்குரல் சஞ்சிகையில் உமார் கய்யாம் பாடலை மொழிபெயர்த்தவர்.
* இந்நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை
* செய்நம்பு நாச்சியார் மாண்மியம் என்ற நூல்
* பாத்திமா சரிதை என்ற நூல்
* அடைக்கலமாலை ஏக தத்துவ சிந்தனை நிறைந்த நூல் தஸ்கீர் சதகம், இறசூல சதகம் - இவைபோன்றன.

* ஏனைய நூல்கள் : முறையீடும் தோற்றமும், மெய்ந்நெறி பாதும்மா சரிதை
* பெற்ற பட்டங்கள் - அருள்வாக்கி, வித்துவ சிரோன் மணி, திவ்விய கவிநாவலர், வித்துவ தீபம்

(5 புள்ளி)

(இ) பேராசிரியர் வி. செல்வநாயகம்

* நாவலர் கல்வி மரம் பல்கலைக்கழக கல்வி மரபும்......
* சிறந்த தமிழாசிரியர்
* தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலின் முக்கியத்துவம்
* தமிழ் உரைநடை வரலாறு என்ற நூலின் முக்கியத்துவம்
* மிகச் சிறந்த இரசிக முறை திறனாய்வாளர்
* கட்டுரை ஆசிரியர்
* அறிவியல் ரீதியான தமிழியல் ஆய்வுக்கு வழிகாட்டியமை (5 புள்ளி)

(ஈ) நீலாவணன்

கிழக்கு இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டவர்.

இயற்பெயர் சின்னத்துரை தமிழாசிரியர்

ஓடி வருவதேனோ என்ற கவிதையினூடக அறிமுகமானவர்

பல்துறை ஆளுமையாளர் - உ-ம்

கவிதை, உருவகக் கவிதை, சிறுகதை, விருத்தாந்த சித்திரம் காவியம், நாடகம், கட்டுரை

கவிதைத் தொகுதி - வழி, ஒத்திகை

காவியம் - வேளாண்மை

நாடகம் - மழைக்கை

நீலவாணன் வாழ்வும் இலக்கியப் பணியும் - கலாநிதி சி. மௌனகுரு எழுதியது.

(5 புள்ளி)

agaram.lk

(உ) கே. கணேஷ்

* மலையக இலக்கியத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்
* இவர் ஓர் முற்போக்கு எழுத்தாளர்
* மொழிபெயர்ப்பாளராக -

  முல்க்ராஜ் எழுதிய தீண்டாதான் நாவல், தலித் இலக்கியத்தின் முதல் நாவல்

  ஐந்து குறு நாவல்கள் - அஜந்தா, அந்தகானம், கூனற்பிறை
* மொழிபெயர்ப்புக் கவிதைகள்

  ஹோசிமின் சிறைக் குறிப்புகள், பல்கேரிய கவிதைகள், பாரதி பக்தன் பார்பரா
* சொந்த ஆக்கம் -

  ஏழு சிறுகதைகள் ஆசாபாசம் (மணிக்கொடியில்)

  சட்டமும் சந்தர்ப்பமும் (யுகம் சஞ்சிகையில்)

  ஆகஸ்ட் தியாகி (வீரகேசரியில்)

  பத்திரகையாளராக -

  நவசக்தி, நேசமணி (தமிழகம்)

  துணை அசிரியர் (வீரகேசரி)

  'ஒவ்வொன்றும் 5 புள்ளிகள் கொண்டவை (5 புள்ளி)



Scanned with CamScanner